## 23.08.2024–ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கையின் நகல்
## தேவகோட்டை நகராட்சி.
## சாதாரணக்கூட்டம்.

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 23.08.2024–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 12.00 மணிக்கு சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**

### பொருள் – 502

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் கிருமி நாசினிகள் மற்றும் உபகரணங்கள் SRI BALAJI MARKETING மற்றும் SRI VINAYAGA PHARMA கொள்முதல் செய்யப்பட்டதில் மேற்படி நிறுவனம் செலுத்தியுள்ள முன் வைப்புத்தொகை கீழ்காணும் விபரப்படி வழங்கப்பட வேண்டியுள்ளது.

| நிறுவனம் | வருடம் | தொகை |
|---|---|---|
| SRI BALAJI MARKETING | 2017 to 2019 | Rs.42734/- |
| SRI VINAYAGA PHARMA | 2018 to 2020 | Rs.31500/- |
| | | Rs.74234/- |

மேற்காணும் நிறுவனத்திற்கு நிலுவைத் தொகை ரூ.74234/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 502 – அனுமதிக்கப்பட்டது.**

––

### பொருள் – 503

தேவகோட்டை நகராட்சியில் நடைபெற்ற பல்வேறு திட்ட பணிகளை தினசரி தமிழ் நாளிதனை தினந்தந்தி நாளிதழில் விளம்பரமாக வெளியிட்டமைக்கு கீழ்கண்ட விபரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | பட்டியல் | தொகை |
|---|---|---|---|
| 1. | தினத்தந்தி | 2324MDU / 211061466 | 34303.50 |
| | மொத்தம் | | 34303.50 |

மேற்காணும் விபரப்படி விளம்பரம் வெளியிட்டதற்கு தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு ரூ.34303.50 க்கு செலவீன பட்டியல் தயார் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 503 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## பொருள் – 504

தேவகோட்டை நகராட்சியில் 1988 முதல் 1989 ஆண்டுகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் பணியிட மாற்றம், பதவி உயர்வு காரணமாக வெளியூர்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், அரசாணை (நிலை) 351 நிதித்துறை (ஊதியக்குழு நாள் 13.08.2008)-ன்படி, தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய 5வது ஊதியக்குழு நிலுவைத்தொகையினை அசல் மற்றும் அதற்கான வட்டியுடன் (ஓய்வு பெற்ற நாள் வரை) வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார்கள்.

அதன்படி விண்ணப்பித்துள்ள 12 ஓய்வு பெற்ற அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வரும் வாரிசுதாரர்களுக்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்)த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பொருள் குறித்து பின்வரும் தணிக்கை ஆண்டில் ஆட்சேபனை ஏதும் எழுப்பப்படும் பட்சத்தில் சம்மந்தப்பட்டவர்களின் ஓய்வூதியம் அல்லது குடும்ப ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்யலாம். என்றநிபந்தனைகளுடன் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும், வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 504 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## பொருள் – 505

இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்கள் ந.க.எண்.047/2024/அ2, நாள் 22.05.2024ம் தேதி கடிதத்தில், 2024-2025ம் ஆண்டிற்கான நகராட்சி வருடாந்திர பங்களிப்புத் தொகை ரூ-75,000/-ஐ (ரூபாய் எழுபத்தி ஐயாயிரம் மட்டும்) வழங்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது.

அதன்படி தேவகோட்டை நகராட்சிக்கான தொகை ரூ.75000/-ஐ இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்துரு வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும், வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 505 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## பொருள் – 506

தேவகோட்டை நகராட்சி நகர்மன்ற தலைவர் வாகனம் எண். TN-63-CX-1617 Scorpio புதிய வாகனம் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. அவ்வாகனத்திற்கு மகேந்திரா ஸ்கார்பியோ டீலரிடம் சென்று தவனை முறை பராமரிப்பு செய்வது அவசியமாகிறது. தற்போது மூன்றாம் தவணை முறை சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது. அனைத்து ஆயுள் சர்வீஸ் மற்றும் பிரேக் செக்கப், வாகனம் வாட்டர் சர்வீஸ் என பராமரிப்பு பணி செய்ய வேண்டியுள்ளது. எனவே அரசு அங்கீகாரம் பெற்ற மானகிரியில் அமைந்துள்ள மகேந்திரா ஷோரூமில் (AUTOMOTIVE MANUFACTURES PVT LTD – KARAIKUDI) சர்வீஸ் பணிகள் செய்திட உத்தேச செவீனம் ரூ.**30,000/–**த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 07.06.2024–ல் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 506 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 507

இந்நகராட்சி 2023–2024 நிதி ஆண்டு கணக்குகள் வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்விநிதி, முடிக்கப்படாமல் இருந்ததை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்கள் மற்றும் தணிக்கை ஆய்வாளர் உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை சிவகங்கை அவர்களிடமிருந்து தணிக்கை முடிக்க ஏதுவாக கணக்குகளை விரைவாக முடித்துக்கொடுக்க அறிவுறுத்தப்பட்டது. கணக்கு முடித்து தர (14.06.2024) அன்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டு (19.06.2024) அன்று இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | தனியார் கணக்கு தணிக்கையாளர் பெயர் | தொகை | எண்ணம் |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.விக்னேஷ்குமார் (ME) | 70000 | 2 |
| 2. | திரு.அ.ராஜாமணி | 60000 | 2 |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் திரு அ.ராஜாமணி தனியார் கணக்கு தணிக்கையாளர் கொடுத்த விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
1)மன்றம் ஏற்கலாம்.
2)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3148/2003/பி1,
**தீர்மானம் 507 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 508

இந்நகராட்சி வழக்கு தொழிலாளர் நீதிமன்றம் வழக்கு எண். ID/191/2001-வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் Preparation of send for Pettion) ரூ.5000 /-ஐ வழக்கிறஞர் திரு.எழிலரசன் Govt pleader மாவட்ட நீதிமன்றம் மதுரை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.2871/2016/சி1**
**தீர்மானம் 508 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 509

தேவகோட்டை நகராட்சி பகுதியில் உள்ள 27 வார்டுகளில் மக்களுடன் முதல்வர் மக்கள் குறை தீர்க்கும் முகாம் நடைபெற ஐந்து திருமண மண்டபங்களில் கீழ்கண்ட அளவுகளில் பிளக்ஸ் பேனர் அமைக்க இந்நகர்மன்ற முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனம் | பிளக்ஸ் பேனர் அளவு | விலை |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | KHALHIMAGAN, Digital Art, Devakottai | பெரிய பிளக்ஸ் பேனர் வைக்க | 16 X 2100 = 33600 |
| 2. | | 5 சென்டர்களில் 3 X 16 | 270 X 10 = 2700 |
| 3. | | மல்டிகலர் ஸ்டிக்கர் | 90 X 35 = 3150 |
| 4. | | வண்டி வாடகை | 2000 |
| 5. | | பிளக்ஸ் பேனர் அமைப்பதற்கான கட்டணம் | 6000 |
| மொத்தம் | | | **47450** |

| வ.எண் | நிறுவனம் | பிளக்ஸ் பேனர் அளவு | விலை |
|---|---|---|---|
| 1. | SS ADS, Flex Printing, Devakottai. | பெரிய பிளக்ஸ் பேனர் வைக்க | 16 X 2000 = 32000 |
| 2. | | 5 சென்டர்களில் 3 X 16 | 250 X 10 = 2500 |
| 3. | | மல்டிகலர் ஸ்டிக்கர் | 80 X 35 = 2800 |
| 4. | | வண்டி வாடகை | 1850 |
| 5. | | பிளக்ஸ் பேனர் அமைப்பதற்கான கட்டணம் | 5250 |
| மொத்தம் | | | **44400** |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய SS ADS, Flex Printing, Devakottai நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.0106/2023/எச்1,

**தீர்மானம் 509 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 510</u>

தேவகோட்டை நகராட்சியில் டெங்கு காய்ச்சல் பரவி வந்த நிலையில் டெங்கு தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் 15000 எண்ணம் பிளக்ஸ் போர்டு 25 எண்ணம், DBC ஆய்வுக்கு தேவைப்படும் 52 வாரங்கள் அடங்கிய A4 அளவுள்ள துண்டு பிரசுரங்கள் 20,000 எண்ணம், DBC Yearly Calender with Sticker பசையுடன் கூடிய 15000 எண்ணம், விழிப்புணர்வு, கலைநிகழ்ச்சிகள் மற்றும் மைக் விளம்பரங்கள் இந்நக்மன்ற தீர்மான எண்.623/2018-ன்படி, அனுமதி பெற்று மேற்கொண்ட வகையில் பட்டியல் படியான செலவினத்தொகை ரூ.4,95,000/- அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம். <u>**ந.க.எண்.**514/2018/**எச்1**</u>

**தீர்மானம் 510 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 511</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இந்நகர் பகுதியில் 27 வார்டுகளில் சேகரமாகும் மறுசுழற்சிக்கு பயன்படாத மக்கும் குப்பை பிளாஸ்டிக் கழிவுகள் இந்நகராட்சியில் உள்ள RRC மையங்களில் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி வேலை உத்தரவு ந.க.எண்.0464/2023/எச்1 நாள் 18.12.2023ன்படி, வழங்கப்பட்டு 210.00 டன் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் பேக்டரி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. தற்போது இந்நகராட்சி RRC மையங்களில் 400 டன்க்கு மேல் பிளாஸ்டிக் கழிவுகள் இருப்பதால் அதனை தனியார் நிறுவனம் மூலம் சிமெண்ட் பேக்டரி நிறுவனத்திற்கு

அனுப்புவதற்கு விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.6,00,000/–லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம். ந.க.எண்.0464/2023/எச்1.

**தீர்மானம் 511 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 512

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இந்நகர் பகுதியில் உள்ள இரண்டு வள மீட்பு மையங்களில் (RRC) மறு சுழற்சிக்கு பயன்பாடத நெகிழிக் கழிவுகளை 400 டன்களுக்கு மேல் பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளதாலும், இதுபோக தினசரி சேகரிக்கப்பட்டு வருவதாலும், இந்நகராட்சியின் சொந்த செலவிலே பிளாஸ்டிக் கழிவுகளை தனியார் நிறுவனங்கள் மூலம் சிமெண்ட் கம்பெனிகளுக்கு கொண்டு செல்வதற்கு இந்நகர்மன்ற முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை |
|---|---|---|
| 1. | SAN Construction, Coimbatore | ஒரு கிலோவிற்கு ரூ.1.55 |
| 2. | Green Ways Roadlines, Covai. | ஒரு கிலோவிற்கு ரூ.1.90 |
| 3. | Green Enviro Management Solutions, Ariyalur | ஒரு கிலோவிற்கு ரூ.2.20 |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் மிக குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **SAN Construction, Coimbatore** நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.0464/2023/எச்1.

**தீர்மானம் 512 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 513

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியின்படி 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நகராட்சி ஆணையர், தேவகோட்டை அவர்களின் செயல்முறைகளின்படி மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் ஏஜென்ஸி காரைக்குடி என்ற நிறுவனத்திற்கு ஓராண்டுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு 31.05.2024-ம் தேதியுடன் முடிவடைவதாலும், இந்திய பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024 தேதி வெளியிட இருப்பதாலும், மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.06.2024 முதல் 30.08.2024 வரை மூன்று மாத காலத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியின்படி ஒரு டன்க்கு 10 சதவிகிதம் அதிகரிப்பு செய்து, பணி நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.11141295/- மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.0105/2023/எச்1

**தீர்மானம் 513 – அனுமதிக்கப்பட்டது.**

––

<u>பொருள் – 514</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு இனிவரும் மழைக்காலம், திருவிழாக்கள் ஆகியவற்றின் பொதுசுகாதாரப்பணிகளுக்கும் உரக்கிடங்கு பணிகளுக்கும், JCB இயந்திரம் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று **01/04/2024** முதல் **31/07/2024** வரை நான்கு மாதகாலத்திற்கு பயன்படுத்திடவும், அதற்கான உத்சே செலவினம் ரூ.**9,75,000/–** த்திற்கும் (ரூபாய் ஒன்பது லட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இ) நகராட்சி பொதுநிதியில் செலவு மேற்கொள்ளலாம்.

<u>ந.க.எண்.5150/2021/எச்1.</u>

**தீர்மானம் 514 – அனுமதிக்கப்பட்டது.**

––

<u>பொருள் – 515</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பொதுசுகாதாரப்பணிகளுக்கும் உரக்கிடங்கு பணிகளுக்கும், JCB இயந்திரத்தின் பணி அவசியம் கருதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளி வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை |
|---|---|---|
| 1. | மலை மாதா டிப்பர் & எர்த் மூவர்ஸ் | ஒரு மணி நேரத்திற்கு ரூ.950/– |
| 2. | மைதின் டிரான்போர்ட்ஸ் & எர்த் மூவர்ஸ் | ஒரு மணி நேரத்திற்கு ரூ.1000/– |
| 3. | விசா எர்த் மூவர்ஸ் | ஒரு மணி நேரத்திற்கு ரூ.850/– |

மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் மிக குறைந்த விலைப்புள்ளி வழங்கிய விசா எர்த் மூவர்ஸ், தேவகோட்டை என்ற நிறுவனத்திற்கு **01.04.2024** முதல் **31.07.2024** வரை நான்கு மாதகாலத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். <u>ந.க.எண்.5150/2021/எச்1.</u>

**தீர்மானம் 515 – அனுமதிக்கப்பட்டது.**

––

<u>பொருள் – 516</u>

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் **27** வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள **31.03.2024–**ந் தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி **45** DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு வருகின்ற **31.05.2024** அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் நகரின் பிற பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் அனைத்து **45** DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா

வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் இரண்டு மாத காலம் **01.06.2024** முதல் **31.07.2024** வரை பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.,**7,00,000/–** த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1769/2016/எச்1.

**தீர்மானம் 516 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 517

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளிலும் தினசரி பண்டிகைகள், கோவில் திருவிழாக்கள் நடைபெறுவதாலும் மேலும் தற்சமயம் கோடை மழைக் காலமாகவும் பருவ மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாலும் சுகாதார பணிகள் மேற்கொள்ளவும், கிருமி நாசினிகள் தெளிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் தற்போது நகராட்சியில் கிருமி நாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு பவுடர், பிளீச்சிங் பவுடர் மற்றும் பினாயில் போன்றவற்றின் இருப்பு மிக மிக குறைவாக உள்ளதால், அவசர அவசியம் கருதியும் கீழ்கண்ட விபரப்படி கிருமி நாசினிகளை வாங்கி பயன்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு பவுடர் 15 மெட்ரிக் டன் கிலோ 1க்கு ரூ.12/- வீதம் GST சேர்த்து ரூ.15/- வீதம் 15 MT (ரூ.15 X 15000 KG) | ரூ.2,25,000 |
| 2. | பிளீச்சிங் பவுடர் (Bleeching Power ) 3 மெட்ரிக் டன் கிலோ 1-க்கு ரூ.45/- வீதம் GST சேர்த்து ரூ.55/- வீதம் 3 MT (ரூ.55 X 3000 KG) | ரூ 1,65,000 |
| 3. | பினாயில் 1000 லிட்டர் லிட்டர் 1-க்கு ரூ.70 /- வீதம் GST சேர்த்து ரூ.85/- வீதம் 1000 லிட்டர் (ரூ.1000X ரூ.85) | ரூ 85,000 |
| | **மொத்தம்** | **4,75,000** |

எனவே நீர்த்த சுண்ணாம்பு 15 மெட்ரிக் டன், பிளீச்சிங் பவுடர், 3 மெட்ரின் டன் மற்றும் 1000 லிட்டர் பினாயில் வாங்க அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,75,000/-க்கு மன்றத்தின் அனுமதி பெற அலுவலக உத்தரவு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.0978/2022/எச்1**

**தீர்மானம் 517 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 518

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இந்நகர் பகுதியில் உள்ள மூன்று MCC மையங்களில் புதுார் அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ள MCC மையத்தில் குப்பை அரைக்கும் இயந்திரம் பழுதாகி பழுது நீக்கம் செய்வதற்கு இந்நகர்மன்ற அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலை |
|---|---|---|
| **1.** | SMK MOTTERES WORKS, PUDUKOTTAI | ரூ.**31,450 /–** |
| **2.** | SRK ELRCTRICAL WORKS, PUDUVAYAL | ரூ.**29,350 /–** |
| **3.** | OM MOTTORS, CHENNAI | ரூ.**35,180 /–** |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் மிக குறைந்த விலைப்புள்ளி வழங்கிய SRK ELRCTRICAL WORKS, PUDUVAYAL, நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 518 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 519

தேவகோட்டை நகராட்சியில் 2021–2022 மற்றும் 2022 – 2023 ஆகிய நிதியாண்டுகளின் தணிக்கை, உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் மேற்கொள்ளப்பட்டது. இத்தணிக்கை மேற்கொண்டதற்கு, உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு ரூ.1,94,938/–ஐ தணிக்கை கட்டணமாக செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 519 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 520

தேவகோட்டை நகராட்சி பகுதியில், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ், சாலையோர வியாபாரிகளின் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன் கீழ், ஏற்கெனவே, உள்ள நகர விற்பனைக்குழுவின் பிரதிநிதிகள் பதவிக்காலம் நிறைவடைந்து விட்டதால் மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்புகள் 2023-ன் படி, நகர்ப்பகுதிகளில் புதிதாக தெருவோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு புதிதாக மின்னணு அடையாள அட்டை மற்றும் விற்பனைக்குழு சான்று வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, இந்நகராட்சியில் GOOD HOPE நிறுவனத்தின் மூலம் புதிதாக பயோமெட்ரிக் அடிப்படையில் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு 232 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மின்னணு அடையாள அட்டை மற்றும் விற்பனைக்குழு சான்று வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA, நாள்.07.06.2024-ல் புதிதாக கணக்கெடுப்புகள் செய்யப்பட்ட சாலையோர வியாபாரிகள் மூலம் தமிழ்நாடு சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல் திட்டம் மற்றும் விதிகள் 2015-ன்கீழ் தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு நாள்.02.11.2015-ல் கண்டுள்ள விதிகளுக்குஉட்பட்டு புதிதாக ஆறு விற்பனைக்குழு பிரதிநிதிகள் தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி பகுதியில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட 232 சாலையோர வியாபாரிகள் மூலம் தேர்தல் நடத்தி உறுப்பினர்கள் தேர்வு செய்ய கீழ்க்கண்ட தேர்தல் அட்டவணை மன்றத்தின் பார்வைக்கு

**தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்**

**சாலையோர வியாபாரிகள் நகர விற்பனைக்குழு உறுப்பினர்கள்**

**தேர்தல் அட்டவணை**

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் பெறப்படும் நாள் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை | 22.07.2024 மற்றும் 23.07.2024 |
| வேட்பு மனுக்கள் திரும்ப பெறும் நாள் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை | 24.07.2024 |
| வேட்ப்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 25.07.2024 |
| தேர்தல் நடத்தும் நாள் | 30.07.2024 |
| தேர்தல் நடக்கும் இடம் | நகராட்சி அலுவலகம், தேவகோட்டை |
| தேர்தல் நடக்கும் நேரம் | காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| தேர்தல் முடிவு அறிவிப்பு | மாலை 5.00 மணி |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

2. மேற்படி தேர்தல் தொடர்பாக ஏற்படும் செலவினங்கள் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.** 781/2020/எப்1,

**3.**பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் **12.07.2024**–ம் தேதிய முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 520 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## பொருள் – 521

இந்நகராட்சி வழக்கு எண். WP(MD)21188/2021 VR.பரமசிவம் வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.**3,10,000/–** ரூபாய் மூன்று லட்சத்தி பத்தாயிரத்தை திரு.வீரகதிரவன் Additional Advocate general-III, சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளை வழக்கறிஞருக்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று தொகை வழங்கியதாவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| S.No | Subject | Appearance Date | Roc.FB.No | Amount |
|---|---|---|---|---|
| 1. | Order passed in WP(MD) 21188/2021 conpt.P(MD) 2247/23 | 21.12.2023 | 1009(1) 2024 21.12.2003 | 20,000/- |
| 2. | Order passed in WP(MD) 21188/2021 conpt.P(MD) 2247/23 | 22.01.2024 | 1040/(1) 2024 14.03.2024 | 20,000/- |
| 3. | Order passed in WP(MD) 21188/2021 conpt.P(MD) 2247/23 | 14.03.2024 | 1099/ 2024 14.03.2024 | 85,000/- |
| 4. | To condone delay in filing appeal against WP(MD) No.21188/2021 MP(MD)1098/2024 | 11.03.2024 | 1097/2024 11.03.2024 | 20,000/- |
| 5. | WP(MD) 21188/21 WA(MD)No.443/2024 | 14.03.2024 | 1098/2024 14.03.2024 | 85,000/- |
| 6. | WP(MD) 21188/2021 WA(MD)No.443/2024 | 26.03.2024 | 1140/2024 | 40,000/- |
| 7. | WP(MD) No.21188/2021 | 02.04.2024 | 1140/2024 | 40,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | conpt.P(MD) 2247/2023 | | | |
| | | | TOTAL | 3,10,000/- |

**. அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 521 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## பொருள் – 522

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் **27** வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள **31.05.2024–ந்** தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி **45** DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு வருகின்ற **31.07.2024** அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் நகரின் பிற பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் அனைத்து **45** DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் இரண்டு மாத காலம் **01.08.2024** முதல் **30.09.2024** வரை பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் **ரூ.,7,00,000/–**த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1769/2016/எச்1,

**தீர்மானம் 522 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## பொருள் – 523

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் நிலவேம்பு குடிநீர் பவுடர் இருப்பு மிகவும் குறைவாக உள்ளது. இனிவரும் காலம் பருவமழை காலம் என்பதால், **150** கிலோ நிலவேம்பு பவுடர் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் **ரூ.2,25,000/–**த்திற்கு செலவினம் மேற்கொள்ளவும் விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1763/2023/எச்1,

**தீர்மானம் 523 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## பொருள் – 524

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி ஏடிஸ் கொசு புழுக்களை கண்டறிந்து அவற்றை அழிக்க பயன்படுகின்ற அபேட் மருத்து **30** லிட்டர் மட்டுமே இருப்பு இருக்கிறது. புகை மருந்து தெளிக்கப்பயன்படும் பைரித்திரியம் 2 % Extract மருத்து **16** லிட்டர் மட்டுமே இருப்பு குறைவாக உள்ளதால், இனிவரும் காலம் பருவமழை காலம் என்பதால் டெமிபாஸ் அபேட் மருத்து **80** லிட்டர் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**52,000/–** செலவினம் மேற்கொள்ளவும், மேலும் பைரித்திரியம் 2% Extract **200** லிட்டர் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**1,99,000/–** செலவினம் மேற்கொள்ளவும் விலைப்புள்ளி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மொத்த உத்தேச செலவினம் ரூ.**2,51,000 /–** மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**3)** விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம். ந.க.எண்.**1094/2024**/எச்**1**,

**தீர்மானம் 524 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 525

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு–**5**ல் உள்ள ஆவரங்காடு பகுதியை கோகுல் நகர் எனவும், வார்டு **2**ல் உள்ள எம்.எம் நகர் பகுதியில் ஸ்ரீராம் முதல் தெரு எனவும் அப்பகுதியின் பொதுமக்கள் கோரிக்கையினை ஏற்று பெயர் திருத்தம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 525 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 526

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இந்நகராட்சியில் உள்ள இரு வள மீட்பு மையங்களில் (RRC) மறுசுழற்சிக்கு பயன்படாத நெகிழி கழிவுகள் தினசரி **4**டன் சேகரிக்கப்பட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு தனியார் நிறுவனமான SAN Construction மூலம் டால்மியா சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு கடந்த **22.02.2024**ம் தேதி வரையில் ரூ.**6,00,000/–** செலவினம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது தொடர்ந்து சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்தி அரியலூார் டால்மியா சிமெண்ட் நிறுவனத்திற்கு கொண்டு செல்வதற்கு உத்தேச செலவினம் ரூ.**5,00,000/–** செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**0464/2023**/எச்**1**,

**தீர்மானம் 526 – அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 527

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் **26.06.2024**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி மலரில் சிறிய அளவில் வெளியிடப்பட்டுதற்கான தொகை ரூ. **26989/–** தினகரன் நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| Invoice No. 1028828 Date 05.03.2024. | தினகரன் நாளிதழ் | தொகை ரூ.**26989/–** |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.**0244/2023/அ1,**

**தீர்மானம் 527 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## <u>பொருள் – 528</u>

தேவகோட்டை நகராட்சி வழக்கு எண். WP (MD) No 211188/2021 திரு.VR. பரமசிவம் வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.**40,000/–** (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) திரு. வீரகதிரவன் Additional Advocate General –III மற்றும் திரு.பாரதி கண்ணன் Standing Counsel சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| Subject | Appearnce Date | Roc. FB. No. | Amount |
|---|---|---|---|
| Order Passed in WP (MP) No.21188/2021 | 19.07.2024 | 1229/2024/AAG-III, Date 19.07.2024 | Rs.40,000 |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். <u>ந.க.எண்.**2037/2023/அ1,**</u>

**தீர்மானம் 528 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## <u>பொருள் – 529</u>

தேவகோட்டை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான **2024–2025**ம் ஆண்டிற்கு எழுது பொருட்கள், படிவங்கள், கணினி டோனர்கள் மற்றும் பணமதிப்பு படிவங்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.**20,00,000/–** (ரூபாய் இருபது லட்சம்) இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.,

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம். <u>ந.க.எண்.**2504/2012/பி2,**</u>

**தீர்மானம் 529 – அனுமதிக்கப்பட்டது.**

**––**

## <u>பொருள் – 530</u>

தேவகோட்டை நகராட்சியில் அலுவலக பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள கலர் காப்பியர் மெஷினில் கருப்பு வண்ண டோனர்கள் தீர்ந்து விட்ட நிலையில் தற்போது பொறியியல் பிரிவின் அலுவலக பணிகள் பாதிக்கப்படுகிறது. திட்ட பணிகளுக்கான திட்ட அறிக்கை தயார் செய்திட கால தாமதம் ஆகின்றது. தற்போது திட்ட பணிகளுக்கு பணி முடிவறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டத்திற்கு அறிக்கைகள் தயார் செய்வது என பணி செய்திட கால தாமதமாகிறது. எனவே பணியின் அவசியம் கருதி பொறியியல் பிரிவில் உள்ள கலர் ஜெராக்ஸ் மெஷினில் (BIZHUB C226i) கருப்பு வண்ண டோனர் **2** எண்ணம் மற்றும் கலர்

வண்ண டோனர் 1 செட் எண்ணம் வாங்கிட உத்தேச செவீனம் ரூ.90,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 530 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 531</u>

தேவகோட்டை நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் உள்ள கலர் காப்பியர் மெஷினில் உள்ள கருப்பு வண்ண டோனர்கள் மற்றும் கலர்வண்ண டோனர்கள் வாங்கிட **11.06.2024** அன்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்த நிலையில் இன்று **(14.06.2024)** இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன் விபரம் பின் வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | எண்ணம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | இந்துஸ்தான் ஆட்டோ மேசன், கோயம்புத்தூர் | Black Toner – BIZHUB<br>Colour toner BIZHUB (XMC)<br>G.S.T 18% | 2 Nos<br>01 Set | **22500/–**<br>**51300/–**<br>**13284/–** |
| | | | மொத்தம் | **87,084/–** |
| 2. | கோல்டன் இன்போ டெக், மதுரை | Black Toner – BIZHUB<br>Colour toner BIZHUB (Z26i XMC)<br>G.S.T 18% | 2 Nos<br>01 Set | **28000/–**<br>**53300/–**<br>**14634/–** |
| | | | மொத்தம் | **95,934/–** |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் இந்துஸ்தான் ஆட்டோ மேசன் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் **14.06.2024**–ல் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 531 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் –532</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**19**, கல்யாணசுந்தரம் நகர் பகுதியில் மழைகாலங்களில் மழைநீர் சாலைகளில் தேங்கி, கொசுக்கள் உற்பத்தியாகி பொது மக்களுக்கு நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன்கருதி சுகதாரதார சீர்கேடு ஏற்பாடா வண்ணம் சுகாதார பணியின் அவசியம் கருதி புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க மதிப்பீடு ரூ.**2,90,000**/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:–**</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 532 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் –533</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22, தொண்டியார் வீதி குறுக்கு (பழனி ஆண்டவர் கோவில் அருகில்) மற்றும் வெள்ளையன் ஊரணி குளக்கால் தெருவில் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலான நிலையில் சாலை பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. சில நேரங்களில் பாதசாரிகள் தடுமாறி கீழே விழும் நிலை ஏற்படுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. இதனால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,80,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :—</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 533 – அனுமதிக்கப்பட்டது.**

——

## <u>பொருள் – 534</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, கார்ப்பரேசன் ரோடு விரிவாக்கம் மேற்கு பகுதியில் சாலை பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் சாலை மேடு பள்ளமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. சில நேரங்களில் பாதசாரிகள் தடுமாறி கீழே விழும் நிலை ஏற்படுகிறது. மேலும் மழை காலங்களில் பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு உருவாகிறது. இதனால் பொதுமக்களுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிய பேவர் பிளாக் சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4,20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :—</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 534 – அனுமதிக்கப்பட்டது.**

——

## <u>பொருள் –535</u>

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான தேவகோட்டை ரஸ்தாவில் உள்ள உரக்கிடங்கு வார்டு 17 செஞ்சை, பிளாக்—11, டி.எஸ்.467ல் அமைந்துள்ளது தற்போது ஏரியா ஹக்டேர் .01, ஏரியா 7334 மீ 49 என்ற அளவில் உள்ளது.

ஆணையர் அவர்களின் உத்தரவின்படி அப்பகுதியில் உள்ள இடத்தினை பாதுகாக்கும் வகையிலும் மற்றும் ஆக்கிரமிப்புகள் எதும் ஏற்படாதவாறு அமைய வேண்டும் என்ற அடிப்படையில் 24/01/24 அன்று முழு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மேற்படி உத்தரவின்படி முறையான சுற்றுச்சுவர் அமைத்து பாதுகாக்கவும், அவ்விடத்தில் காவலர் அறை மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்து தற்போது நடைபெற்று வரும் பையோ மைனிங் பணி ஒரு சில மாதங்களில் முடிவுற்ற பின்பு மரக்கன்றுகள் அமைத்து (மியாவாக்கி) குறுங்காடுகள் அமைக்க ஏதுவாக அமைப்பு மற்றும் நகராட்சியின் சொது பாதுகாக்கப்படும் என்ற நகராட்சியின் நலர்

கருதி தயார் செய்யட்ட மதிப்பீடு ரூ.20,00,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :—</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 535 – அனுமதிக்கப்பட்டது.**

——

## <u>பொருள் –536</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் சுமார் 60,000 மக்கள் தொகை உள்ளனர். தினசரி 13 உயர்மட்ட தொட்டிகள் வழியாக ரூ.4.68 மி.லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மழைகாலமாக உள்ளதால் பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் குடிநீரில் பிளீச்சிங் பவுடர் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளதால் பிளீச்சிங் பவுடர் உடன் விநியோகம் செய்ய ரூ.1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 536 – அனுமதிக்கப்பட்டது.**

——

## <u>பொருள் – 537</u>

தேவகோட்டை நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. தற்போது நகரில் உள்ள வார்டுகள் அனைத்தும் விரிவாக்க பகுதிகளாக உருவாகி வருகின்றன. விரிவாக்க பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் பதிக்க வேண்டி அவசியமாகிறது. மேலும் வரும் நிதியாண்டுகளில் சாலை பணி திட்டங்கள் வர உள்ளதால் பொதுமக்களின் குடிநீர் பணியின் அவசியம் கருதி விடுபட்ட விரிவாக்க பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே குடிநீர் பணியின் அவசியம் கருதி விடுபட்ட தெருக்களில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்கவும் அதற்காகும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேடப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை குடிநீ நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 537 – அனுமதிக்கப்பட்டது.**

——

## <u>பொருள் – 538</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27ல் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டைவிட கூடுதல் செலவீனமாக எலக்டிரிக்கல், பிளம்பிங் வேலைகள், புதிய மின் விளக்குள் மற்றும் மின் விசிறிகள் பொருத்துதல் பணி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுசுவர் மற்றும் வர்ணம் பூசுதல் பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு மேற்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 538 – அனுமதிக்கப்பட்டது.**

--

## பொருள் – 539

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் இராம்நகர் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதி சற்று மேடான பகுதியாக இருப்பதால் நீரழுத்த குறைவு காரணமாக இப்பகுதிக்கு முழுமையாக கிடைக்கப்பெறுவதில் சிரமம் உள்ளது. மேலும் நகர் விரிவாக்க பகுதியாக உள்ளது. தற்போது குடிநீர் சீராக அனைத்து வீடுகளுக்கும் கிடைப்பதில்லை. எனவே இப்பகுதிகளில் சிறிது குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. மேற்கானும் இராம்நகர் பகுதியில் புதிதாக ஆழ்துளைக்குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி புதிதாக ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்திட ரூ.3,00,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு

அலுவலக குறிப்பு:–
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 539 – அனுமதிக்கப்பட்டது.**

--

## பொருள் – 540

அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறை நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a) நாள். 04.02.2019-ன் படி தமிழ்நாட்டில் உள்ள அணைத்து உள்ளாட்சிகளிலும் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019-ல் ஆணை வெயிடப்பட்டுள்ளது. இந்த உத்திரவிற்கிணங்க, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் சுற்றிக்கை ந.க.எண். 31159/2018/டிபி3, நாள்.05.03.2019-ல் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குவது குறித்து நடைமுறைகள் கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகளில் 2019-ன் விதி எண்.14-ல் கட்டிட அனுமதி காலம் தற்போது நடைமுறையில் உள்ள 3 ஆண்டு காலத்தை ஐந்தாண்டுகள் எனவும் மற்றும் ஒருமுறை காலநீடிப்பு மூன்று ஆண்டுகள் எனவும் அனுமதி வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே கட்டிட அனுமதி கட்டணத்தை ஐந்தாண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும் காலநீடிப்பு காலத்தை மூன்று ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றி அமைத்து விதிகளின்படி, கட்டண விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவகோட்டை நகராட்சியில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டிட உரிமம், மனைப்பிரிவு ஒப்புதல் போன்றவற்றிற்கான கட்டணம்ங்கள் நிர்ணயிக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேல் ஆவதாலும் நகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணங்கள் நிர்னையிக்கப்பட

வேண்டும். எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்கவும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் அமைப்பு சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 35/2022ன்படி திருத்தியமைக்கப்பட்டுள்ளது) ன் பிரிவு 103-மன் படி கிழ்கண்டுள்ளவாறு திருத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களை 01.08.2024 முதல் நடைமுறைப்படுத்தி வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

திருத்தியமைக்கப்பட்ட கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | விவரம் | அளவு | காலஅளவு | தற்போதுவசூலிக்கப்படும்கட்டணம் | | | காலஅளவு | உத்தேசிக்கப்பட்டுள்ளகட்டணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை | | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை |
| 1 | மனைஉட்பிரிவு (8 மனைகள்வரை) | ஒருமனைக்கு | | 2000 | | | ஒருமுறைமட்டும் | 5000 | | |
| 2 | காலியிடத்தைதெருக்களாகஅங்கீகாரசெய்ய (Layout Fees) | ஒருஏக்கர்அதன்பாகத்திற்கு | ஒருமுறைமட்டும் | 1000 | | | ஒருமுறைமட்டும் | 20000 | 20000 | 25000 |
| 3 | கோவில்கள்எதிரிலும், திருவிழாகாலங்களிலும்தெருவில்பந்தல்போட்டுக்கொள்ள | திருவிழாநடக்கும்காலவரை | - | - | | | | இலவசம் | | |
